# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 176/மா/2025**

**நாள்: 04.02.2025**

A.J. ஆரோக்கிய ஜெயசாமி,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–75, பம்மல், எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், அன்னை தெரசா தெரு, பிளாட் எண் 38 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் 19.03.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.03.2025 அன்று பெறப்பட்டு 176/மா/2025 என எண்ணிட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–75, பம்மல், எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், அன்னை தெரசா தெரு, பிளாட் எண் 38 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி தனது 19.03.2025 நாளிட்ட மனுவில் "THE HINDU" 12.01.2025 நாளிட்ட செய்தித் தாளின் நறுக்கினை இணைத்து பின்வரும் புகாரினைத் தெரிவித்துள்ளார்:–

> "Thiruneermalai Main Road between Pammal and (via) Kamarajapuram, Anakaputhur badly damaged in view of Underground drainage Pipes were laid, the road was not still carried out reparis."

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 28.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் தனது 12.12.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 5371/2025/இ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

> "தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–1க்குட்பட்ட பகுதியில் வசிக்கும் திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் புகாரில் திருநீர்மலை பிரதான சாலை (பம்மல் முதல் காமராஜபுரம் வரை) சேதமடைந்த சாலையாக உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுவதாக தெரிவித்துள்ளார்.
>
> மேற்படி புகார் தெரிவிக்கப்பட்ட பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் நிறைவு பெற்று சாலை அமைக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.12.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 17.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

> "பம்மல் வழியாக காமராஜபுரம் மற்றும் அனகாபுத்தூர் இடையேயான திருநீர்மலை பிரதான சாலையில், பாதாள வடிகால் குழாய்கள் பதிக்கப்பட்டதால் சாலைகள் மோசமாக சேதமடைந்துள்ளது, அச்சாலை தற்போது பழுது பார்க்கப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது. இருப்பினும், மேற்கண்ட சாலையினை இன்னும் வாகனங்கள் சீராக செல்லும் வகையில் மேம்படுத்துமாறு, தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் 30.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

> "தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1–க்குட்பட்ட பகுதியில் வசிக்கும் A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் புகாரில் திருநீர்மலை பிரதான சாலை (பம்மல் முதல் காமராஜபுரம் வரை) சேதமடைந்த சாலையாக உள்ளதால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்படுவதாக தெரிவித்துள்ளார்.
>
> மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் நிறைவு பெற்று சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும், மனுதாரர் இன்றைய வாக்குமூலத்தில், சாலையை இன்னும் மேம்படுத்துமாறு கோரியுள்ளதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்."

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

> பம்மல் வழியாக காமராஜபுரம் மற்றும் அனகாபுத்தூர் இடையே அமைந்துள்ள திருநீர்மலை பிரதான சாலையில், பாதாள வடிகால் குழாய்கள் பதிக்கப்பட்டதால் சாலைகள் மோசமாக சேதமடைந்துள்ளது என்றும், அதனை செப்பனிட தெரிவித்திருப்பது மனுதாரரின் மனுவிலிருந்து தெரிய வருகிறது. மேற்படி சாலை தற்போது பழுது பார்க்கப்பட்டு பயன்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட சாலையினை இன்னும் வாகனங்கள் சீராக செல்லும் வகையில் மேம்படுத்துமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.
>
> தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1–க்குட்பட்ட பகுதியில் வசிக்கும் A. J. ஆரோக்கிய ஜெயசாமி என்பவரின் புகாரில் திருநீர்மலை பிரதான சாலையில் பம்மல் முதல் காமராஜபுரம் வரை சேதமடைந்த சாலையாக உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ள பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் நிறைவு பெற்று, சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதும், மனுதாரர் 30.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது அளிக்கப்பட்ட வாக்குமூலத்தில், சாலையை இன்னும் மேம்படுத்துமாறு கோரியுள்ளதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை

எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1–க்குட்பட்ட பகுதியில் திருநீர்மலை பிரதான சாலையில் பம்மல் முதல் காமராஜபுரம் வரை பாதாள சாக்கடை அமைக்கப்பட்ட போது ஏற்பட்ட சேதமடைந்த சாலையில், தற்போது பாதாள சாக்கடை பணிகள் நிறைவு பெற்று, அங்கு சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்றும், மனுதாரர் 30.12.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது அளித்த வாக்குமூலத்தில், சாலையை இன்னும் மேம்படுத்துமாறு கோரியுள்ளதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தாம்பரம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள நிலையில், மேற்கண்ட சாலையினை மேம்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையினை விரைவில் மேற்கொள்ளுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 04–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. A. J. ஆரோக்கிய ஜெயசாமி,
பிளாட் எண் 38, அன்னை தெரசா தெரு,
எல்.ஐ.சி காலனி விரிவாக்கம், பம்மல்,
சென்னை–600 075.

(2) ஆணையர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

(4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை– 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032